பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 19 | 04-08-94 | வியாழக்கிழமை | ஓசை 167

## கிராமசேவை உத்தியோகத்தர் மத்திய அரசின்கீழ் வருவர்

மாகாண சபைகளின் கீழ்வரும் கிராமசேவை உத்தியோகத்தர்களின் பொறுப்புக்களை மீண்டும் மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வருவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கொழும்பு மாவட்ட செயலாளர் சனத் வீரக்கோன் தலைமையின் கீழான விசேட குழு செய்த சிபார்சுகளின் அடிப்படையில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இம் முடிவுக்கு சிறிலங்கா அமைச்சரவை நேற்று அங்கீகாரம் அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது. சகல கிராமசேவையாளர்களுக்கும் (4 ஆம் பக்கம் பார்க்க)



தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன், பலாலி விமானப் படைத் தளத்தினுள் ஊடுருவிச் சென்று தாக்குதல் நடத்திய கரும்புலிகள் அணித்தலைவர் கரும்புலி மேஜர் நிலவன் (கெனடி)



தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரனுடன், பலாலி விமானப் படைத் தளத்தினுள் ஊடுருவிச்சென்று தாக்குதல் நடத்திய கரும் புலிகள் அணி.

# பலாலி தளம் மீதான தாக்குதலில் ஆறு கரும்புலிகள் வீரச்சாவு

## வட-கிழக்கு யுத்தத்தில் 5613 படையினர் பலி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் இதுவரை 5613 படையினர் கொல்லப்பட்டதுடன் 6995 பேர் காயமடைந்துள்ளதாகவும் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் போது காயமடைந்த படையினருக்கு விவசாய காணி வழங்குதல் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: யுத்த நடவடிக்கைகளின் போது எவ்வளவு படையினர் கொல்லப்படுவர் என வரை (4 ஆம் பக்கம் பார்க்க)

### தாக்குதல் நடந்த வேளை பலாலி விமானத்தளத்தில் ஐ. நா. அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானத்தளம் மீது புலிகள் தாக்குதல் நடத்திய வேளையில் அங்கு ஐ. நா. தொண்டர்குழுவைச் சேர்ந்த இரு அதிகாரிகள் தங்கியிருந்ததாக கூறப்படுகிறது.

புலிகளின் தாக்குதலை அடுத்து இவ் அதிகாரிகள் நேற்று முன் தினம் தாமதமாகவே பலாலியிலிருந்து புறப்பட முடிந்தது எனவும் தெரிய வருகிறது. முன்னர் இவர்கள் இருவரும் காலையிலே கொழும்பு செல்வதற்கு ஏற்பாடாகியிருந்தது.

வடக்கு - கிழக்கில் சேவையாற்றுவதற்கு வைத்தியர்களை நியமிப்பது தொடர் (4 ஆம் பக்கம் பார்க்க)

### கொல்லப்பட்ட மீனவர் இந்தியாவிலிருந்துவந்தவர்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக்கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் சிறிலங்காப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவரான அடைக்கலசாமிஅன்ரனி என்பவர் இந்தியாவிற்கு அகதியாகச் சென்று திரும்பியவர் என தெரியவருகின்றது.

இது தொடர்பாக அகதிகளுக்கான ஐ. நா. யாழ். வதிவிடப் பிரதிநிதி தமது கொழும்பு தலைமை அலு (4 ஆம் பக்கம் பார்க்க)

### கைதான மீனவர்

# துணைக்கு சென்ற இருபோராளிகளும் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் பலாலி விமானப்படைத் தளத்தினுள் கரும்புலிகள் அணியொன்று ஊடுருவி மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலின்போது ஆறு கரும்புலிகள் வீரச் சாவைத் தழுவிக்கொண்டனர். அத்தோடு, அவர்களுக்கு துணையாகச் சென்ற இரு போராளிகளும் வீரமரணமடைந்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை பலாலி விமானப்படைத் தளத்தினுள் விடுதலைப் புலிகளின் அணி ஒன்று அதன் மையப்பகுதிவரை ஊடுருவித் தாக்குதல் நடத்தியது தெரிந்ததே. இத்தாக்குதலில், ஒரு ஹெலிகொப்டர், பவள்கவசவாகனம் என்பன முற்றாக அழிக்கப்பட்டதுடன் பல சிறிலங்கா படையினரும் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலின் போதே ஆறு கரும்புலிகளும், அவர்களுக்கு துணையாகச் சென்ற இரண்டு போராளிகளும் வீரச் சாவைத் தழுவிக் கொண்டனர், இவ்வாறு ஊடுருவிய கரும்புலிகளின் அணிக்கு மேஜர் நிலவன் (கெனடி) தலைமை தாங்கிச் சென்றார்,

வீரச்சாவடைந்த இக்கரும்புலிகளின் விபரம் வருமாறு:

★ **கரும்புலி மேஜர் நிலவன் (கெனடி)**
ஜெசுமி பெர்னாண்டோ
வண்ணாகுளம் அடப்பன், மன்னார்

★ **கரும்புலி மேஜர் ஜெயம்**
குணநாயகம் தேவராசா
திருகோணமலை

★ **கரும்புலி மேஜர் திலகன்**
சுப்பையா ராஜ்
மட்டக்களப்பு

★ **கரும்புலி கப்டன் திரு**
கோணமலை முகுந்தன்
அம்பாறை

★ **கரும்புலி கப்டன் நவரெட்ணம்**
கிருஸ்கோகு லெப்பேட் அண்ணாதாஸ்
செட்டிகுளம்
தற்போதைய முகவரி: மடு அகதிமுகாம், மன்னார்

★ **கரும்புலி லெப்டினன்ட் ரங்கன்**
குணமாலை ரதிக்குமார்
தற்போதைய முகவரி: சுரபியடி, வட்டக்கச்சி கிளிநொச்சி

பலாலி விமானப்படைத் தளத்தினுள் ஊடுருவிச் சென்று தாக்குதல் நடத்திய கரும்புலிகள் அணிக்கு உறுதுணையாகச் சென்று வீரச்சாவடைந்த இரண்டு விடுதலைப் புலிகள் போராளிகளின் விபரம் வருமாறு:

★ **மேஜர் சேரன் (அசோக்)**
குணசிங்கம் குணராஜ்
தனங்கிளப்பு-சாவகச்சேரி

★ **கப்டன் ஈழவன் (ராஜேஸ்)**
வேலாயுதம் உபேந்திரன்
புலோலி தெற்கு, புலோலி

வீரச்சாவடைந்த இவ் எட்டுப் போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## தீவுப்பகுதி செல்லவிருந்த அதிகாரிகளின்பயணம்ரத்து

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதியில் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடும் ஈ.பி.டி.பி. குழுவினருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவினருக்கும் இடையே நிகழும் மோதல் நிலையை முடிவிற்கு கொண்டுவரும் நோக்கில் தீவகப் பகுதிக்கு செல்லவிருந்த அரச அதிகாரிகள் மற்றும் படை அதிகாரிகள் கொண்ட குழுவினரின் பயணம் இறுதி நேரத்தில் இரத்தானது-

நேற்று முன்தினம் அதிகாலை பலாலி இராணுவ முகாம் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலினால் விமானம் மூலம் பலாலி வரவிருந்த இந்த அதிகாரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி தளம் மீதான அச்சுறுத்தல் நீடிக்கிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் பலாலி இராணுவ முகாம் மீது நடத்திய தாக்குதல் திட்டமிட்ட ரீதியில் நடத்தப்பட்டதாகவும் இது யாழ். மாவட்டத்தில் நடத்தப்படவுள்ள தேர்தலை குழப்புவதற்கு மேற்கொடண் நடவடிக்கை என பிரிகேடியர் கெமுனு குலதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை கொழும்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இக் கருத்தை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மேற்பார்வையாளர் கூட்டம்

எதிர்வரும் 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள 5-ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு மேற்பார்வையாளராகவும் நிரந்தர நோக்குநர்களாகவும் நியமிக்கப்பட்ட சகலரும் தங்கள் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோட்டக் கல்வி அலுவலகத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**கரும் புலிகள் சிறப்பிதழ்**

ஈழநாதம் மக்கள் தினசரி நாளை கரும் புலிகள் சிறப்பிதழாக வெளிவருகிறது.

## பலாலியில் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கடற்பகுதியில் வைத்து சிறிலங்கா படையினரினால் கைது செய்யப்பட்ட குருநகரைச் சேர்ந்த மரியதாஸ் சந்திரகுமார் என்ற மீனவர் தற்சமயம் பலாலி முகாமில் உள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 19 ஆம் திகதி இவர்கைது செய்யப்பட்டவுடன் மண்டைதீவு படை முகாமில் இருந்து பலாலி முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இத்தகவல் தற்சமயம் ஊர்ஜிதப் படுத்தப்பட்டு தமக்கு கிடைத்துள்ளதாக அகதிகளுக்கான ஐ. நாவின் யாழ் வதிவிடப்பிரதிநிதி நமது நிருபரிடம் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரணி வேட்பாளர் பொலிசாரினால் கைது

(கொழும்பு)

பொலநறுவை மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமை வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன அரனங்கல பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளரான ஒரு பெண்ணின் சங்கிலியைத்திருடினார் என்பதன் பெயரில் இவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டதாக பொலிஸ்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## எதிரணி ஆதரவாளர் கொலைக்கு பொலிஸ் கான்ஸ்டபிளின் துப்பாக்கி

(கொழும்பு)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளரான நவரட்ணராஜா திலகரத்தினா என்பவர் கடந்த வியாழனன்று அதிகாலை 2.00 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட எஸ். 84 ரகத் துப்பாக்கி றிசர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் பாவனையில் இருந்துள்ளது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி ரந்தெனி இதுபற்றி மேலும் கூறுகையில், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கும் ஐ.தே.க.ஆதரவாளர்களுக்கும்இடையில் கடந்த புதனன்று இடம் பெற்ற மோதலைத் தொடர்ந்து இத்துப்பாக்கிச் சூடு இடம் பெற்றிருப்பதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் இக்குறிப்பிட்ட றிசர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள் வடமத்திய மாகாண அமைச்சர் ஒருவரின் மெய்ப்பாதுகாவலர் என்பது குறிப்பிடத்தக்கது எனவும் தெரிவித்தார்.

## தேசிய அரசாங்கமொன்றை பொ.ஐ.மு. அமைக்காது

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்றை தமது கட்சி என்றும் அமைக்கப்போவதில்லை என்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைக்கும் சமயத்தில் தன்னுடன் கூட்டுசேர்ந்துள்ள கட்சிகளுடன் மட்டுமே ஆட்சியை அமைக்கும் எனவும் சுதந்திரக்கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று நண்பகல் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் இக்கருத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைக்கும் வேளை சந்திரிகா குமாரண

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்

## விற்பனைக்குண்டு

நல்ல இன அல்சேசன் நாய்களும்அழகிய பொம்மனேரியன் நாய்களும் விற்பனைக்குண்டு தொடர்பு;- சபா விற்பனை நிலையம், அச்சுவேலி. (8991)

## விற்பனைக்குண்டு

சரசாலை கனகன்புளியடிச் சந்திக் கருகாமையில், சாவகச்சேரி றோட்டில், சகல வசதிகளும் கொண்ட வீடும் வளவும் (12 பரப்புக் காணி) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு;- திருமதி சம்புலிங்கம் C/o இராமச்சந்திரன் இளைப்பாறிய ஆசிரியர் சரசாலை தெற்கு சாவகச்சேரி. (9002)

## ஆண்டு 3, 4 வகுப்புகள்

புலமைப்பரிசில் பரீட்சைக்கு அடிப்படையான ஆண்டு 3, ஆண்டு 4 வகுப்புக்கள் மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன் ஆரம்பமாகியுள்ளன. ஆண்டு 4 weekend class 06. 08. 94 சனி பி. ப 2.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. (9016)

## புலமைப் பரிசில் பரீட்சை

புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் 31. 07. 94 ஞாயிறு, 02. 08. 94 செவ்வாய், 04. 08. 94 வியாழன் வெளியிடப்பட்ட புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்களை (கணிதம், தமிழ்) இதுவரை பெறாதவர்கள் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (9015)

## வீடு விற்பனைக்கு

வதிரி நீதிமன்றத்திற்குப் பின்புறமாக ஒழுங்கையில் உள்ள ஒரு பரப்புக் காணி வசதியான வீட்டுடன் குழாய்க்கிணறு, மலகூட வசதியுடன் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு:-
கு. செல்வரட்ணம்
நல்லாதோலை,
வதிரி,
கரவெட்டி.

(சி-10034)

# அந்தியேட்டி அழைப்பும்

## 31-ம் நாள் நினைவஞ்சலியும்



மலர்வு
12-1-1909
உதிர்வு
6-7-1994

அமரர்
### சின்னத்துரை சுப்பிரமணியம்
(இளைப்பாறிய தபால் அதிபர்)

விழிநீர் பெருகி ஆறெனவே ஓடும்
வாட்டும் சோகமதே வான்வரை உயரும்
அன்பே உன் இழப்பை ஈடுசெய்யும்
வழி அறியாது இன்னும் நாம் வாடுகின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் நாளை (5 - 8 - 94) அந்தியேட்டி கிரியைகள் நடைபெறும்.

காட்டுப்புலம் - குடும்பத்தினர்.
தொண்டமனாறு தகவல்:- ஞா. உதயமூர்த்தி

(900.6)

# 31-ம்நாள் நினைவஞ்சலி

05 - 08 - 1994



மலர்வு:
14 - 10 - 1917

உதிர்வு:
06 - 07 - 1994

திதி:
05 - 08 - 1994

### திருமதி மீனம்மா ஐயாத்துரை
(சாவகச்சேரி)

சாவகச்சேரி திரு. க. ஐயாத்துரை (இளைப்பாறிய தலைமை ஆசிரியர், வீரகேசரி பத்திரிகை முகாமையாளரும் செய்தியாளரும்) அவர்களின் அன்பு மனைவி திருமதி மீனம்மா ஐயாத்துரையின் ஆத்மா சாந்தி பெறுவதாக!

என் அன்பே என் வீட்டில் ஒளி தந்த விளக்கே
நீ இன்றெங்கே வானத்தில் இருக்கின்றாய் ஏனோ
சொல். சென்றங்கே நீ குடி கொண்டதனால்
நானுந்தான்வந்தங்கேகுடியேறிவாழவாசொல்லம்மா!

நன்றி

திருமதி மீனம்மாவின் அந்தியகால அபரக்கிரியைகள், சடங்குகளில் பங்குபற்றியோர் அனுதாபம் தெரிவித்தோருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் குடும்ப டாக்டர்கள் சண்முகராசா, கருணாகரன் குடும்பத்தாருக்கும், சுகவீனமுற்ற காலத்தில் உதவிய பெரியாஸ்பத்திரி டாக்டர்கள், உத்தியோகத்தர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி.

''ஆனந்தவாசம்'' திரு க. ஐயாத்துரை
தபாற்கந்தோர் வீதி, பிரியமான கணவர்
சாவகச்சேரி. (8995)

# நினைவு கூருகின்றோம்...

## 04-08-1994...

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த,

**அமுதன்** (அரியமுத்து அமுதலிங்கம் - ஈவினை, புன்னாலைக்கட்டுவன் - யாழ்)

1987ஆம் ஆண்டு மன்னார் - பூநகரி, 4-ம்கட்டை இராணுவமுகாமில் வைத்து இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பெயரால் அறிவிக்கப்பட்ட யுத்தத்திற்கு மாறாக சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட,

பிரதேச படைத்துறை தளபதி,

★ **தேவா** (-- மங்களநாயகம் - முல்லைத்தீவு)

★ **குகன்** (-- செந்தில்குகன் - கைதடி - யாழ்)

1989ஆம் ஆண்டு மட்டு - கித்துள் சந்திப்பகுதியில் இந்தியப்படையினருடனான சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். தம்பிராசா** (த. கிருஷ்ணகுமார் - கரடியனாறு - மட்டு)

இதே இடத்தில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சுரேன்-ஜிம்போ** (கந்தவேள் குருநாதன் - இருதயபுரம் மேற்கு - மட்டு)

முல்லைத்தீவு - கள்ளிக்காட்டுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சுரேஸ்** (ந. சிவராசா - திருமலை)

கரவெட்டி - துன்னாலையில் இந்தியப்படையினருடனான சமரின் போது விழுப்புண்ணடைந்து மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**சங்கர்** (குணம் குணபாலன் - இராஜகிராமம் - கரவெட்டி - யாழ்)

யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்.

1990ஆம் ஆண்டு வவுனியா - மாமடுமுகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் விளாத்திக்குளம் பகுதியில் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**ஜெசி** (-- க. சிறிரஞ்சன் - வவுனியா)

**விபுலானந்தன்** (இராமசாமி இராசகுமார் - வவுனியா)

**றோகான்-குக்ன்** (வீரகத்திப்பிள்ளை குகதாசன் - கேணிக்குளம் ஒழுங்கை, இருபாலை கிழக்கு - யாழ்)

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ. நடவடிக்கையின் போது புல்லாவெளியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**உதயன்** (முருகேசு குமாரசாமி - 64, மண்டூர் 03- மட்டு)

**கப்டன் தும்பன்** (சின்னத்தம்பி சூரியமூர்த்தி- சிவன்கோயில் வீதி, மட்டுவில் தெற்கு- சாவகச்சேரி)

**கேதீஸ்** (சுப்பிரமணியம் விஜயதாசன்- பொன்னாலை தெற்கு, சுழிபுரம் - யாழ்)

**நிசாந்தன்** (இளையதம்பி பிறேமசிறி - நாயன்மார் வீதி, நல்லூர்- யாழ்)

**தர்மிலா** (கௌரி கனகு - செல்வபுரம், உரும்பராய் தெற்கு - யாழ்)

1992ஆம் ஆண்டு வவுனியா - இறம்பைமடுவில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான அதிரடித்தாக்குதலில் வீரச்சாவெய்திய-




★ உலகக் கிண்ணக் காற்பந்துப்போட்டிகளின் முழுமையான விபரங்களை இன்றுவரை அறிய முடியவில்லையே என நீங்கள் கவலைப்பட்டதுண்டா...?

★ கவலையை விடுங்கள் ஓகஸ்ட் மாத

''உலக உலாவை''ப் பாருங்கள்



"உலக உலாவை"ப் பாருங்கள்

உலகக் கிண்ணக் காற்பந்துப் போட்டி

# உலக உலா

தொடர்பான முழுமையான விபரங்களுடன்

★ எருமைகளால் பறக்க முடியுமா?

முடியாது என்பதே உங்கள் பதில்

ஆனால் "உலகஉலா" வின் பதில்...?

படியுங்கள்

ஓகஸ்ட் மாத "உலக உலா"வில் பதில் தெரியும்



★ குர்திஸ் இனத்தின்மீது மீண்டும் ஆக்கிரமிப்பு
★ யேமனில் உள்நாட்டுப் போர்
★ ஆபத்தில்லா ஆயுதங்கள் கண்டுபிடிப்பு
★ ருவாண்டா ஒரு கொலைக்களம்
★ கேணல் கடாபியுடன் நேர்காணல்
★ 3 மில்லியன் ஆண்டு பழமையானவர்
★ ஒப்பரேசன் டி டே
★ சீனாவில் கிறிஸ்தவ மதம்
★ நுண்ணுயிர் கொல்லிகளின் முடிவு
★ விஞ்ஞான அறிவியல் விந்தைகள்

ஆகிய செய்திகளையும் அறிவியற் கட்டுரைகளையும் தன்னகத்தே கொண்டு உலா வருகிறது இம் மாத

## "உலக உலா"

படியுங்கள்.... அறியுங்கள் தாய் நாட்டை வளம்படுத்துங்கள்

★ யாழ் மாவட்டத்தில் உள்ள சகல புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(10036)


1992ஆம் ஆண்டு வவுனியா - இறம்பைமடுவில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான அதிரடித்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். முத்துக்குமரன்-எமில்டன்** (சோமசேகரம் நிமலநாதன்- குறிசுட்டகுளம், கனகராயன்குளம்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும்சிறிலங்கா-இந்தியப்படைகளினாலும், தேசவிரோதிகளினாலும்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10033)


## யூலை மாத அதிர்ஷ்டசாலிகள்

1-ம் பரிசு:-6756 K. ஐங்கரன், தொழில் பேட்டை வீதி, தோப்பு, அச்சுவேலி;
2-ம் பரிசு:-6876 ஈச்சமோட்டை சனசமூக நிலையம், ஈச்சமோட்டை
3-ம் பரிசு:- 6922 V. சிவமணி, அராலிமத்தி, வட்டுக்கோட்டை,

நீங்களும் அதிர்ஷ்டசாலிகள் ஆக உங்கள் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்.

★ சகல பொருட்களும் நியாய விலையில்
★ சிறந்த தையல் சேவை
★ அன்பளிப்பு மடல்கள்

## எழிலகம்

லெப். இளங்கோ தெரு, யாழ்ப்பாணம்.

(சி-10035)

நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்

**சிந்தனைக்கு..**

கொக்கொக்க கூம்பும் பருவத்து - மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

- திருக்குறள்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 04-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## எதிரியின் வீட்டிற்குள் கரும்புலிகள்

சிறிலங்கா போர் யுக்திகளையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் விடுதலைப்புலிகள் இயக்கம் காலத்திற்குக் காலம் கேள்விக்குரியதாக்கியே வருகின்றது. இந்த வகையில் நேற்று முன்தினம் கரும்புலிகள் மேற்கொண்ட பலாலி விமானப்படைத் தளத்தினுள் ஊடுருவி நடத்திய தாக்குதலும் முக்கியம் பெறுகின்றது. இத்தாக்குதலானது எட்ட முடியாத சிகரத்தை எட்டிய செயலாகும்.

பலாலி விமானப்படைத் தளமானது தனியான ஒரு விமானப்படைத்தளம் மட்டுமல்ல; இலங்கையிலுள்ள மிகவும் முக்கியமான கூட்டுப்படைத்தளம் ஆகும். இது போன்ற பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கூடிய ஒரு தளம் இலங்கையில் வேறு எப்பகுதியிலும் இல்லை என்று கூறினாலும் மிகையில்லை.

சிறிலங்கா இராணுவத்தால் 'விடுவிக்கப்பட்ட பகுதி' என்றும், 'பாதுகாப்பு வலயம்' என்றும் கூறப்படும் பகுதிகள் முழுமையாக 24 மணி நேரமும் இராணுவத்தின் நேரடிக் கண்காணிப்பிற்குள் இருப்பவை. இந்நிலையில் இப்பகுதிக்குள் தாக்குதல் நடத்துவதென்பது சிறிலங்கா இராணுவத்தின் போர் யுக்திக்கும், பாதுகாப்பு ஏற்பாட்டிற்கும் விடுக்கப்பட்ட சவால் என்பதில் சந்தேகமில்லை.

அதிலும் பலாலியில் நேற்று முன்தினம் கரும்புலிகள் நடத்தியுள்ள தாக்குதலானது ஒரு 'விடுவிக்கப்பட்ட' பகுதிக்குள்ளோ அன்றி 'பாதுகாப்பு வலயத்திற்குள்ளோ' நடத்தப்பட்ட தாக்குதல் எனக் கொள்ள முடியாது. அது ஒரு படைத்தளத்தின் மையப் பகுதியில் நடத்திய தாக்குதலாகும். அதாவது இது எதிரியின் முற்றத்தில் நடத்திய தாக்குதல் அல்ல, எதிரியின்

# வாக்குச் சாவடி அமையும் பகுதியில் நடந்த தாக்குதல்

### சிங்கள பத்திரிகையாளர் லூசியன் ராஜகருணநாயக்க

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது யாழ். மாவட்டத்தில் அமையவிருந்த தேர்தல் சாவடிகளில் ஒன்றாக பலாலி இராணுவமுகாமும் இருந்தது இங்கு தேர்தல் சாவடி அமைக்கப்பட்டதற்கு கொழும்பில் தமிழர் தரப்புகள் எதிர்ப்பு தெரிவித்தமைக்கு பலாலி தாக்குதல் வலுப்படுத்தியுள்ளது என பிரபல செய்தியாளரான லூசியன் ராஜகருணநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதமாக வட பகுதியில் காணப்பட்டஓய்வை இந்த பலாலி தாக்குதல் முடிவுக்கு கொண்டுவந்துள்ளது. வடபகுதியில் முக்கிய படைத்தளமாக பலாலி உள்ளது. யாழ். மாவட்டத்தில்படையினர் கட்டுப்பாட்டில் இன்னமும் எஞ்சியுள்ள ஒரு சில இடங்களில் பலாலியும் ஒன்றாகும். இம்மாதம் நடைபெறவுள்ளதேர்தலில் யாழ். மாவட்ட வாக்குச் சாவடி ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்ட இடங்களில் ஒன்றாக பலாலி இருந்தது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## 15 லட்சம் ரூபா மான நஷ்டம் கோரி அத்த, ராவய, யுக்திய மீது ஐ.தே.க.வேட்பாளர் வழக்கு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் ஐ.தே. கவின் சார்பில் போட்டியிடும் ராஜிந சேனாரட்ண மூன்று பத்திரிகைகளிடம் மான நட்டம் கோரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அத்த, ராவய, யுக்திய ஆகிய பத்திரிகைகளிடம் சுமார் பதினைந்து லட்சம் ரூபா நட்டஈடு கோரி இவர் வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார்.

சட்டத்தரணி மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இம் மனுவில் இப்பத்திரிகைகள் வெளியிட்ட சில செய்திகளினால் தமக்கு அபகீர்த்தி ஏற்பட்டிருப்பதாகவும், பொதுமக்கள் முன்னிலையில் கேலிக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## எக்கட்சி வெற்றிபெறினும் வன்முறை சாத்தியமே

(கொழும்பு)

எந்தக் கட்சி வெற்றியீட்டினாலும் நாட்டில் வன்முறை ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகளே அதிகமாக இருப்பதாக ஆசிய நாடுகளுக்கான தூதுவராலய ஒன்றியத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் பிரான்ஸ் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்துள்ளார்.

இத்தகையநிலை ஏற்படுவதற்கு முக்கிய காரணம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக கட்சிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையே எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## பொலிசார்மக்கள்எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டாம்

### சிறிமாவோ கோரிக்கை

(கொழும்பு)

கட்சி வேறுபாடுகள் இல்லாத ஒரு நிலையில் கடமைகளை மேற்கொள்ளுமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கடிதமொன்றை எழுதியுள்ளார்.

இவ்வாறு கடமையாற்ற தவறினால் மக்கள் கோபமடைந்து வன்முறைகளை உங்கள் மீது திருப்புவது தவிர்க்க முடியாது என்றும் எனவே மிகுந்த சமயோசித புத்தியுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தாம் பிரதிநிதித்துவம் செய்யும் ஓர் அணியை தெரிவு செய்யும் உரிமை மக்களிடம் இருப்பதாகவும் எனவே மக்களின் விருப்பத்திற்கு அமையவே ஆட்சி இருக்க வேண்டும் எனவும் இதற்கான ஒரு சுமுகமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதே பொலிசாரின் கடமை எனவும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## எப்பாவல பகுதிக்கு

## கடும் மழை

மத்திய மலைநாட்டுப் பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் நீரேந்து பகுதிகளில் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. நிலச் சரிவுகளும் ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் இருந்தும் மக்கள் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளனர். எனினும் எவருக்கும் உயிரிழப்பு ஏற்படவில்லை.

## தும்புத்தொழில் ஊக்குவிப்பு

தும்புத் தொழிலை ஊக்குவிக்கும் முகமாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 21 குடும்பங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்களை வழங்கியுள்ளனர்.

அண்மையில் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்ட இக்கடன் வழங்கல் நிகழ்வில் கடற்புலிகள் மாவட்ட இணைப்பாளர் திரு. நளன், கடற்புலிகள் அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தி, அரசியற்துறை வட்டப் பொறுப்பாளர் திரு. சதீஸ், அரசியல்துறை கிராமியப் பொறுப்பாளர் திரு தமிழேந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒரு குடும்பத்துக்கு தலா 10,000 ரூபா வீதம் வழங்கப்பட்ட இக்கடனுதவி போன்று கடற்றொழில் ஊக்குவிப்புக்கெனவும் குடும்பத்தி

## குடிநீர் திட்டத்தை விஸ்தரிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபை குடிநீர் விநியோகத் திட்டத்தை விஸ் தரிக்கவுள்ளது. இதற்கென கொழும்பில் இருந்து ஏழு லட்சம் ரூபா பெறுமதியான குடிநீர் விநியோகிப்பதற்கான உபகரணங்கள் கப்பல்மூலம் எடுத்து வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நான்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள், எஸ்லோன் குழாய்கள் மற்றும் பல உபகரணங்கள் எடுத்து வரப்படவுள்ளன இவை வந்து சேர்ந்ததும் யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் குடிநீர் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு மக்களுக்கு திருப்தியளிக்கும் முறையில் குடிநீர்விநியோகிக்கமுடியும்என்று மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (88)

## பாடசாலை உடைத்து நள்ளிரவில் திருட்டு

(தொல்புரம்)

தொல்புரம் கிழக்கில் உள்ள பாடசாலை ஒன்றும், உப தபால் அலுவலகமும் நள்ளிரவு வேளை திருடர்களினால் உடைக்கப்பட்டு அங்குள்ள பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இக் கொள்ளைச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது; தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் மண்டபக் கதவை உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த பல பெறுமதி வாய்ந்த பொருள்களை சூறையாடிச் சென்றுள்ளனர். சுவர்மணிக்கூடு, கால்பந்து, வாழ்க்கைத்திறன் பாட கற்பித்தலுக்கான உபகரணங்கள், சமையல் பாத்திரங்கள், வெண் கட்டிப் பெட்டிகள், மேசை மணிக்கூடு, கைவாள், அலவாங்கு உட்பட மற்றும் பல பெறுமதி வாய்ந்த பொருள்களை சூறையாடியுள்ளனர்.

மேலும், இதே தினம் நள்ளிரவு இந்தப் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள தொல்புரம் உப தபால் அலுவலகத்தின் கதவின் பூட்டுக்களை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்குள்ள மரப் பெட்டகத்தை உடைக்க எடுத்த முயற்சி பயனளிக்காது போகவே, அங்கிருந்த மேசை மணிக்கூடு ஒன்றை மட்டும் எடுத்துச் சென்றுள்ளனர். இவ்விரு சம்பவங்கள் பற்றியும் சங்கானை காவல் துறைப் பணிமனையில் புகாரிடப்பட்டதை அடுத்து காவல்துறையினர் புலன் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர், என தெரியவருகிறது. (41)

## கடல் சமிக்ஞை விளக்கு பயன்படுத்த தடைவிதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில், கடற்கரைகளில் சமிக்ஞை விளக்குகள் அமைப்பதற்கு படையினர் தடைவிதித்துள்ளனர். சமிக்ஞை விளக்குகள், விடுதலைப் புலிகளுக்கு இடங்களை அடையாளங் காண உதவுமென்பதாலேயே இத்தடை நிலவுவதாக தெரிய வருகின்றது.

இதனால் இரவு வேளைகளில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதேவேளை களுவாஞ்சிக்குடி, காத்தான்குடிப் பகுதிகளில் மட்டும் இவ்வாறான சமிக்ஞை விளக்குகளை அமைக்க படையினர் அனுமதியளித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## விருது பெற்ற கார்ட்டர் சடலமாக மீட்பு

(ஜோஹன்னஸ்பேர்க்)

அமெரிக்காவினால் வழங்கப்படும் பத்திரிகையாளர்களுக்கான அதியுயர் புலிட்சர் விருதை கடந்த வருடம் பெற்றுக் கொண்ட தென்னாபிரிக்க செய்தி புகைப்படப் பிடிப்பாளரான கெவின் அவரது காரிலிருந்து மீட்கப்பட்டார்.

சூடானில் பட்டினியால் வாடும் சிறுவன் ஒருவனின் சாவை எதிர்பார்த்த வண்ணம் கழுகு காவல் இருப்பதை மிகவும் தத்ரூபமாக படம் பிடித்தமைக்காக 93-

பகுதியில் நடத்திய தாக்குதலாகும். அதாவது இது எதிரியின் முற்றத்தில் நடத்திய தாக்குதல் அல்ல, எதிரியின் வீட்டிற்குள் நடத்திய தாக்குதலாகும்.

அத்தோடு பலாலி விமானப்படைத் தளத்தினுள் விடுதலைப்புலிகள் நடத்திய முதலாவது தாக்குதலும் அல்ல இது. பூநகரி முகாம் மீதான தாக்குதலின் போதும் இதே பகுதியில் கரும்புலிகள் அணி ஒன்று ஊடுருவித் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தது. இதன் மூலம் சிறிலங்காவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் எவையும் தம்மை தடுத்து நிறுத்தி விடக் கூடியவையல்ல என்பதையும் கரும்புலிகள் மீண்டும் ஒரு தடவை உணர்த்தியுள்ளனர்.

இந்த வகையில் பலாலி விமானப்படைத்தளம் மீதான தாக்குதலானது இராணுவ ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இதனை இத்தாக்குதலின் பின் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சும், இராணுவத் தரப்பும் பட்ட அவஸ்தையில் இருந்தே புரிந்துகொள்ள முடியும்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகள் மற்றும் முப்படைகளின் தளபதிகள், உயர் அதிகாரிகள் அடங்கிய உயர் மாநாடு ஒன்று நடத்தப்பட்ட அதே வேளை, இராணுவத்தளபதி இத்தாக்குதல் தொடர்பான முழுவிபரமும்சமர்ப்பிக்குமாறு ாதுகாப்பு அமைச்சினால் கோரப்பட்டார். இதைத் தொடர்ந்து இராணுவத் தளபதி அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டு பலாலிக்கும் வந்திருந்தார்.

இவ்வாறாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் பதற்றம் ஏற்பட்டமைக்குக் காரணம் விடுதலைப் புலிகளின் இத்தாக்குதலானது தனியாக இராணுவத் தளபாட மற்றும் உயிர் இழப்பை மட்டும் அது ஏற்படுத்தியதனால் அல்ல பலாலி படைத்தளத்தின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கியதனாலாகும். அதற்கும் மேலாக இராணுவத்தின் முழு பாதுகாப்பு யுக்திகளையுமே சீர்குலைத்துவிட்டதினாலுமாகும்.

இதேசமயம் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை அதிர்ச்சிக்கும், பதற்றத்திற்கும் உள்ளாக்கிய இத்தாக்குதலானது இலகுவில், எவராலும் செய்து முடிக்கக் கூடியதல்ல. கரும்புலிகளால் மட்டுமே இது சாதிக்கக் கூடியதாகும். ஏனெனில் இதற்கான மனோபலமும், துணிவும் அவர்களிடமே உண்டு.

# எப்பாவல பகுதிக்கு மேலதிக பொலிசார்

(கொழும்பு)

அநுராதபுரம் எப்பாவலப் பகுதியில் சுதந்திரக் கட்சி அமைப்பாளர் பியசேனா ஐ.தே.க ஆதரவுக் குழுக்களினால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பதற்றம் நிலவுவதால் அப்பகுதிக்கு பொலிசார் அனுப்பப்பட்டுள்ளனர்.

இவரின் மண் வீடும் எரிக்கப்பட்டுள்ளதால் அவ்விடத்தில் ஓலையினால் குடிசை ஒன்று அமைக்கப்பட்டு அங்கு பூதவுடல் வைக்கப்பட்டு பின்னர் தகனம் செய்யப்படும் வரையில் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பு

கால்நடை வளர்ப்போரின் நன்மை கருதி வன்னி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி வருகின்றனர்.

இந்த வகையில் அண்மையில் நெடுங்கேணி துணுக்காய், கண்டாவளை ஆகிய பிரதேசங்களில் உதவி அரசாங்க அதிபர்களினதும் கால்நடை வைத்தியர்களினதும் அனுசரணையுடன் இந்த சங்கங்கள் அமைக்கப்பட்டன

இவ்வாறு அமைக்கப்பட்ட தாய்ச்சங்கங்களில் நெடுங்கேணி சங்கத்தின் கீழ் 07 கிளைச்சங்கங்களும், துணுக்காய் சங்கத்தின் கீழ் 18 கிளைச்சங்கங்களும் கண்டாவளைச் சங்கத்தின் கீழ் 05 கிளைச்சங்கங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# வயிற்றில் குண்டு வெடித்து சிப்பாய் தற்கொலை

## ஏறாவூரில் சம்பவம்

(மட்டக்களப்பு)

ஏறாவூர் கிரான் பகுதியில் இராணுவ சிப்பாய் ஒருவர் தமது வயிற்றில் குண்டொன்றை வெடிக்கச் செய்து தற்கொலைசெய்துகொண்டார். குளத்திற்குச்சென்ற இவர் அங்குவைத்தே தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் குளத்திற்குச்சென்ற சிறிது நேரத்தில் வெடிச்சத்தம் கேட்டதாகவும் சகபடையினர் அங்கு சென்றபோது கைகள் துண்டித்து வீசப்பட்டு வயிறும் சுக்குநூறான நிலையில் இவர் இறந்து கிடந்தார் எனவும் தெரியவருகிறது.

---

# விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கான இலவச உலர் உணவு விநியோகத்தில் இம்முறை லக்ஸ்பிறே உட்பட அரிசி, மா, சீனி, மைசூர் பருப்பு போன்ற பொருட்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. (88)

ன்று கடற்றொழில் ஊக்குவிப்புக்கெனவும் குடும்பத்திற்கு தலா 5,000 ரூபா வீதம் 08 கடற்றொழில் குடும்பங்களுக்கு இங்கு வைத்து கடன்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 12ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் சிறப்பாக நடைபெறும் அடுத்த மாதம் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த் தத்திருவிழாவும் இடம்பெறும். (88)

# நியமனம் கிடைத்தது

பருத்தித்துறை கல்விக் கோட்டத்தில் 70 பயிலுநர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன. 29-3-1994 முதல் இவர்களுக்கு மாகாண சபையால் நியமனம் வழங்கப்பட்டிருப்பதாகவும் இக்குறித்த திகதியில் இருந்து இவர்களுக்கு வேதனமும் வழங்கப்படுமெனவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே தி. செல்வரட்ணம் தெரிவித்தார்.

(யோ)

# கௌரவம்

(வடமராட்சி)

மேலைப் புலோலி ஆலடிப் பிள்ளையார் ஆலய உற்சவத்தின் போது தினமும் தொடர் மகாபாரதம் பற்றி சொற்பொழிவு ஆற்றிய ஆசிரியர் திரு. அ. ஜெகதீஸ்வரன் அவர்களுக்கு ஆலய நிர்வாகத்தினரால் பொற்கிழியும் பரிசில்களும் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (யோ)

பிரிக்க செய்தி புகைப்படப் பிடிப்பாளரான கெவின் பட்ரிக் கார்ட்டர் இனந்தெரியாத வகையில் சடலமாக, பதை மிகவும் தத்ரூபமாக படம் பிடித்தமைக்காக 93-ம் ஆண்டின் புலிட்சர் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது.

"எனது ஜனாதிபதி காலத்தில்"

---

# வெங்கட்ராமன் நூலுக்கு கருணாநிதியும் எதிர்ப்பு

(சென்னை)

முன்னாள் இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் எழுதிய "எனது ஜனாதிபதி பதவி காலத்தில்" என்ற சர்ச்சைக்குரிய நூலைகலைஞர்கருணாநிதியும்கண்டனம் செய்துள்ளார். ஏற்கனவே இந்நூல் இந்திரா காங்கிரஸ் கட்சியினராலும் கண்டனத்திற்குள்ளாகியுள்ளது. ராஜீவ் முதிர்ச்சியற்ற அரசியல்வாதி; பாராளுமன்ற அனுபவம் இல்லாதவர் என அந்நூலில் வெங்கட்ராமன் குறிப்பிட்டிருந்ததால் அது பெரும் சர்ச்சையை இந்தியாவில் உருவாக்கியுள்ளது.

இந்நிலையில் காவிரிநீர் குறித்து முன்னாள் மைசூர் இராஜ்யத்திற்கும்முன்னைய சென்னை மாகாணத்திற்கும் 1924 இல் ஏற்பட்ட உடன்பாடு 1974 இல் காலமாகிவிட்டது. என அந்நூலில் முன்னாள ஜனாதிபதி எழுதியுள்ளதை கருணாநிதியும் கண்டித்துள்ளார் தமிழரான வெங்கட்ராமன் தமிழர் நலன்களுக்கு துரோகம் செய்துவிட்டார். என கண்டனம் தெரிவிக்க தி.மு.க. சனியன்று பொதுக்கூட்டம் ஒன்று நடத்தவுள்ளது.

சென்னையிலும் தமிழகத்திலும் ஆர். வெங்கட்ராமன் கலந்து கொள்ளவிருந்த நிகழ்ச்சிகள் இந்நூலினால் இரத்தாகிவிட்டன. அவரின் இல்லம் முன் காங்கிரஸ் ஆதரவாளர் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். நூல் சர்ச்சைக்குரியதாக இருப்பினும் இதன் முதற்பதிப்பு முழுமையாக விற்றுத்தீர்ந்துவிட்டது. இரண்டாவது பதிப்பு முழு வேகத்தில் விற்பனையாகிறது மூன்றாவது பிரதி அச்சேறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994 - 08 - 04

**வியாழன் இரவு**

08.01- சொல்லுங்கள் பார்க்கலாம்

08.10- உரை "கலைச் சங்கம் மருவிய காலம்"

08.20- உழைப்போம் உயர்வோம் "போகிறேன் சூட்டடுப்பு வாங்க" உரையாடல்

08.30- செய்திகள்

08.40- இலங்கை- இந்திய ஒப்பந்தம் பற்றி 1987 ஓகஸ்ட் 4-ம் திகதியன்று தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் சுதுமலையில் ஆற்றிய உரை

08.50- மலரும் மொட்டுக்கள்

### 1994 - 08 - 05

**வெள்ளி காலை**

07.02 - மாவீரவணக்கம்

07.15- விடுதலை கானங்கள்

07.30 - செய்திகள்

07.35- பத்திரிகைச் செய்திகள்

07.40- விடுதலை கானங்கள் நிகழ்ச்சியில் தொடர்ச்சி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



# பங்குச்சந்தை ஊழல் விவகாரம் நிதிஅமைச்சர் பதவி விலக தயாராம்

(டில்லி)

கட்சிக்கும், நாட்டுக்கும் நன்மை பயக்கக்கூடும் என்று கருதப்பட்டால தான் பதவி விலகத் தயார் என்று இந்திய நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

பங்குச்சந்தை ஊழல் தொடர்பாக பாராளுமன்றக் கூட்டுக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அமைச்சர்கள் அதிகாரிகள் போன்றோர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று கூறி எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருப்பது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் புதுடில்லியில் பி. வி நரசிம்மராவ் தலைமையில் நடைபெற்றது. அப்போதே நிதியமைச்சர் பதவி விலகத் தயார் என்ற தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 1933 - 07 - 10



விண்ணில்: 1993 - 08 - 14

அமரர் மு. செல்லத்துரை
(இளைப்பாறிய இலிகிதர்,
தொழில் திணைக்களம், கொழும்பு)
திதி
1994-08-04

உள்ளமோ அனலாகுதைய்யா
கண்களோ குளமாகுதைய்யா
உடலோ மெழுகாய் உருகுதைய்யா
பண்பின் பிறப்பிடமே பாசத்தின் உறைவிடமே
கருணையின் சின்னமே அறிவின் சிகரமே
பாரெல்லாம் பரிதவிக்க பறந்தோடிப் போனதேனோ
எம்மை எல்லாம் தனிக்க வைத்து மாயமாய்
மறைந்ததேனோ.

பாசப்பசியால் வாடும்
குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்

''கணேசபதி'
அல்வாய் வடக்கு. (9007)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



## மென்பந்து கிரிக்கட்

(யாழ்ப்பாணம்)

வாலை அம்மன் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும் வருடாந்த 7பேர் கொண்ட 10 ஓவர் மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 4.15மணிக்கு செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது. இதில் வாலை அம்மன் விளையாட்டுக் கழக பச்சை அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதுகிறது.

## விமானம் நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா விமானப் படையினரின் குண்டுவீச்சு விமானம் ஒன்று நேற்றுக் காலை 7.50 மணியளவில் மூளாய், பொன்னாலை, சுழிபுரம் பகுதிகளின் வான்பரப்பில் சுற்றிவட்டமிட்டு அப் பகுதிகளின் மக்கள் குடியிருப்புக்களை நோட்டம் இட்டுச் சென்றது- (41)

## மழலை கலையமுதம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை எக்ஸ்பிறஸ் கல்வி நிலையத்தின் பாலர் கல்விப் பிரிவு நடாத்திய 'மழலை கலையமுதம்' நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பிற்பகல் நிலைய அதிபர் திரு. த. வரதராஜா தலைமையில் நடைபெற்றது. (22)

## ஒளிவீச்சு ஜூன் 94 ஒளிநாடா வெளிவந்தது

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான ஒளிவீச்சு 94' ஜூன் மாத வீடியோ சஞ்சிகை வெளிவந்துவிட்டது இதில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள், தமிழீழத்தில் சிறப்புற நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சி நாள், சிறிலங்கா வான்படை குண்டுவீச்சைக் கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம், தமிழீழ காவற்றுறையினர் பற்றி விவரணம், கலை நிகழ்ச்சிகள் என்பவற்றுடன் வழமையான அம்சங்கள் இடம்பெற்றுள்ளன-

இவ்வீடியோ சஞ்சிகையானது நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படவுள்ளது.

## கடந்த மே மாதம் முதல் அதிகரித்த ஓய்வூதியம்

இந்த ஆண்டு மே மாதம் முதலாம் திகதி முதல் சகல ஓய்வூதியம் பெறுவோருக்கும் அதிகரித்த ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது,

ஓய்வூதியம் வழங்கப்படுவதில் நிலவும் முரண்பாடுகளை நீக்குவது தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு செய்த சிபார்சுகள்இந்த ஆண்டு மே முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து சகல ஓய்வூதியம் பெறுவோருக்கும் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் அதிகரித்த நிலுவைப் பணத்தை வழங்கும்படி ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட 300ரூபா ஓய்வூதிய உயர்வு ஒரு இடைக்கால நடவடிக்கையே என்றும் ஓய்வூதிய கொடுப்பனவிற்கான வருடாந்த ஒதுக்கீடு 120கோடி ரூபாவினால் அதிகரிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

### கைதான

மேற்படி கைது செய்யப்பட்ட மீனவர் அகதியாக இந்தியாவில் இருந்து அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயத்தினுடாக இலங்கைக்கு திரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசும் சிங்கள மக்களுமே காரணம்

## லண்டன் பல்கலை பொதுநல அமைப்பு பணிப்பாளர்

(லண்டன்)

தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை வழங்குவதில் சிங்கள மக்களும், அரசாங்கமும் பின்னடித்து வருவதாகவும் இதனாலேயே இலங்கையில் இனப்பிரச்சினை தொடர்ந்து நிலவி வருவதாகவும் லண்டன் பல்கலைக்கழக பொதுநல நாடுகளின் சபையின் பணிப்பாளர் ஜே. எல். மெனம் தெரிவித்துள்ளார்.

லண்டனில் இருந்து வெளிவரும் 'இன்டநேசனல் எலட்' க்கு எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வடக்கு - கிழக்கில் ஏற்பட்ட பிரச்சினைக்கு அரச பயங்கரவாதமே முக்கிய காரணம் என்றும் இதன் மூலம் தமிழ் சிங்கள மக்கள் தீவிரவாதிகளாக மாறவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனவாதம் உச்ச கட்டத்தில் இன்று இருப்பதாகவும் இதற்கு காரணம் ஆட்சி மாற்றப்படும் என்ற பீதியினால் அரசியல்வாதிகள் தொடர்ந்து தன்வசம் ஆட்சியை வைத்திருப்பதற்காக இனவாதத்தை பயன்படுத்தி வந்தமையே ஆகும் என்றும் எனினும் சந்திரிகா குமாரணதுங்காவினை தலைமையாக கொண்ட பொது ஜன ஐக்கிய முன்னணி தற்போது இது விடயமாக மிகவும் அவதானமாக செயலாற்றி வருவதாகவும், இனப்பிரச்சினைக்கு தீர்வை அரசியல் ரீதியாக வழங்க முன்வந்தமை குறிப்பிடத்தக்கது எனவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆகஸ்ட் மாதம் 16-ஆம் திகதி நடைபெறும் பொது தேர்தலில் சந்திரிகா தலைமையிலான ஆட்சிக்கு நாடு செல்லும் என்றும் ஆனால் அது சுதந்திரமான ஓர் ஜனநாயக தேர்தலில் மட்டுமே இது சாத்தியப்படக் கூடியதாக இருப்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தேசிய

துங்கவே பிரதமர் என்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா இது குறித்துதெளிவாக முடிவு எடுத்துள்ளார் என்றும் இருவருக்கும் இடையே பிளவு என்பது ஐ. தே. க. செய்யும் ஒரு விசமத்தனமான தேர்தல் பிரசாரம் எனவும் தெரிவித்துள்ளார்.

### கொல்லப்பட்ட

வலகத்திற்கு அறிவித்துள்ளார்.

1992 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அகதிகளுக்கான ஐ. நா. வினால் அன்றி இலங்கை - இந்தியாவின் பேச்சுக்களின் அடிப்படையில் இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பியவர்களில் இவரும் ஒருவர் எனவும் இதற்கு தாம் பொறுப்பல்ல எனவும்

## வவுனியா புகையிரதத்தில் ஏமாற்றுப் பேர்வழிகள்

கொழும்பு-வவுனியா இரவு தபால்புகையிரதத்தில்பயணம் செய்யும் தமிழர்கள் ஏமாற்றுப் பேர்வழிகளிடம் சிக்கிக் கொள்ளும் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

கொழும்பிலிருந்து வட பகுதிக்கு புறப்பட்ட பயணிகள் சிலரிடம் கோட்டை ரயில் நிலையத்தில் வைத்தே பலாத்காரமாக பணம் வசூலிக்கப்பட்ட சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

இரவு ரயிலைப் பிடிப்பதற்காக வந்த தமிழ்க் குடும்பமொன்றிடம், பொருள்களைத் தூக்கிவரும்போது, பொதி பெரிதாக இருப்பதால் 150 ரூபா தந்தால்தான் அனுமதிப்பேன் என டிக்கட் பரிசீலிப்பவர் தடுத்தார். பலத்த வாக்குவாதத்தின்பின் 20ரூபா பெற்றுக்கொண்ட பின்பே அக் குடும்பம் ரயில் நிலையத்தினுள் நுழைந்ததும், கூலிக்கு ஆசனம் பிடித்துக் கொடுப்பவர் ஒருவர் ஐந்து ஆசனங்களை 250 ரூபாவுக்குத்தான் பிடித்துத் தந்தேன் என வாதிட்டு. அக் குடும்பத்திடமிருந்து 50 ரூபாவை அறவிட்டாராம்.

மேற்படி நபருக்கு உதவியாக சீருடையில் வந்த ஒருவரும், பலத்த சர்ச்சையில் ஈடுபட்டார். இறுதியில் மேலதிகாரியிடம் முறையிடப்படும் என சக சிங்களப் பயணி ஒருவர் மிரட்ட ஆரம்பிக்கவே அச் சீருடை நபர் நழுவி விட்டாராம்.

### தீவுப்பகுதி

களின் பயணம் இரத்தானது என கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன-

மேற்படி அதிகாரிகள் குழுவுடன் சேர்ந்து ஈ.பி.டி.பி. குழுவைச் சேர்ந்த சிலரும் ஈ.பி ஆர்.எல்.எவ். குழுவைச் சேர்ந்த சிலரும் வருவதற்கு ஏற்பாடாகியிருந்தது-

பலாலி வரை விமானத்தில் வந்திறங்கி காங்கேசன்துறையிலிருந்து கப்பல் மூலம் தீவுப் பகுதிக்கு இவர்கள் செல்ல ஏற்பாடாகியிருந்தது- இறுதி நேரத்தில் இது இரத்தானது- (தி), (பா)

### எதிரணி வேட்.

வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இதே வேளை நேற்று முன்தினம் பொதுஜனஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசார நடவடிக்கையில் இவர் ஈடுபட்டிருந்த வேளை ஐ. தே. க. ஆதரவாளர்கள் இவர் மீது தாக்குதல் நடத்தியதாகவும் இதனால் இவரின் வாகனம் முற்றாக சேதம் அடைந்து காணப்பட்டதாகவும் இவர் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்தார் எனவும் ஆனால் இது குறித்த எந்த நடவடிக்கையும் பொலிசார் எடுக்கத் தவறி மாறாக இவரை கைதுசெய்துள்ளதாக சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதே வேளை பொதுஜன ஐக்கியமுன்னணியின் தேர்தல் பிரசாரத்திற்காக சந்திரிகா குமாரணதுங்கா இன்றுபொலநறுவை மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொள்ள இருந்தமையும் இதனை குழப்பும் நோக்குடன் ஓர் அமைச்சரின் வேண்டுகோளின்பெயரில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர்மேலும் தெரிவித்தார்.

### பலாலி

அவர் வெளியிட்டார். அவர் தொடர்ந்து பத்திரிகையாளர்

றது. இதற்கு பிரிகேடியர் பதிலளிக்கையில் இது தொடர்பாக தற்போது முடிவு கூற முடியாது என்றும் பாதுகா



## மகாலிங்கம் மணிவண்ணன்

B. Sc [Electrical Engineer]
(Lakehead University, Thunder Bay, Canada)

அன்னை மடியில்: 14 - 05 - 1966     ஆண்டவன் அடியில்: 21 - 06 - 1994

நாவற்குழியூர் சித்திவிநாயகன் அடித்தாமரையை முடிமேற் சூடி அகம்மிக நெகிழக் கசிந்துருகும் அன்பன், சித்திவிநாயகர் சனசமூக நிலைய உறுப்பினனாய் ஊர் சிறக்க, ஊரார் மகிழத் தொண்டுபல ஆற்றிய கர்மவீரன். யாழ்/நாவற்குழி மகாவித்தியாலயத்தின் பிள்ளையாய், யாழ்/இந்துக் கல்லூரியின் மைந்தனாய் விளங்கியவன். மனித நேயத்தை மகத்தானபண்பாகப் போற்றி அனைத்து மக்கள் மனதிலும் இடங்கொண்ட உத்தமன். ஏழாண்டுகளுக்கு முன் கனடாவென்னும் நந்நாடடைந்து, பல்கலைக்கழகத்திற் பயின்று, மின் பொறியியலாளர் பட்டம் பெற்ற அறிஞன். பெற்றாரையும் உடன் பிறந்தோரையும் தன்பாலழைத்த ஒரு சில திங்களின் பின், தன் 28-வது அகவையில் விண்ணடைந்து விநாயகன் திருவடி சேர்ந்தனன். அன்னான் ஆன்மா அமைதியடைய எல்லாம் வல்ல பிரணவப் பொருளை வழுத்துவோமாக.

நாவற்குழி    (9011)    உறவினர், நண்பர்கள்

இப பததிரிகை யாழபபாணம மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

களுக்குள் அதிகரித்து நிலு வைப் பணத்தை வழங்கும்படி

...ங்கைக்கு திரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
### யாழ். மாவட்டம்
## உறுப்பினர் அனைவர்க்கும்

27-ஆம் தேதிய நிர்வாகசபை கூட்டத்தில் எமது யாப்பு புதிதாக திருத்தியமைப்பதாக முடிவெடுக்கப் பட்டுள்ளது.

அதில் அமையவேண்டியதென தாங்கள் எதிர் பார்க்கும் அம்சங்களை தங்கள் கோட்ட செயலகங்களிலோ அல்லது மாவட்ட செயலகத்திலோ எழுத்து மூலம் இம்மாதம் 15-ஆம் தேதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எமது ஒன்றியத்திற்கான ஒரு இலட்சனையும் அமைக்கப்படவுள்ளது. அதன் அமைப்பு பற்றிய தங்கள் கருத்துக்களையும் மேற்கூறிய திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

பொதுச் செயலாளர்
(சி-10038)    யாழ். மாவட்டம்

## விற்பனைக்கு

சுத்தமான பிண்ணாக்கு, காவடிமார்க்கற்பூரம். கோழித்தீன், பாக்கு, சீனி, வாள்பிளேட் மலிவாக கிடைக்கும்.

தொடர்பு:-
**C.M. சுகந்தினி**
309, K.K S. வீதி,
யாழ்ப்பாணம்.

(9013)

### ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்
## துவிச்சக்கரவண்டி விநியோகம்

துவிச்சக்கரவண்டி தேவையான ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க அங்கத்தவர்கள் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சி/10037)    பொது முகாமையாளர்

யாவில் இருந்து இலங்கை திரும்பியவர்களில் இவரும் ஒருவர் எனவும் இதற்கு தாம் பொறுப்பல்ல எனவும் இருந்தும் இத்தகவலைஎமதுகொழும்புத் தலைமையகத்திற்கு தாம் அறிவித்துள்ளதாகவும் அகதிகளுக்கான ஐ. நா. யாழ் வதிவிடப் பிரதிநிதி திரு. அசோக்குமார் தெரிவித்தார். (பா, தி)

### வட-கிழக்கு

யறுத்துக் கூறமுடியாது.

1978-ஆம் ஆண்டின்பின் இதுவரை படையினரும் பொலிசாருமாக 16953 பேர் ஓய்வு பெற்றுள்ளனர்.

ஒரு வருடத்தில் 370 முதல் 1105 பேர் வரையில் ஓய்வு பெறுகின்றனர். கடந்த வருடத்தில் மட்டும் 722 பேர் ஓய்வு பெற்றுள்ளனர் எனத் தெரிவித்தார்

### பலாலி விமான

பாக யாழ்.மாவட்டநிலைமைகளை நேரில் அவதானிப்பதற்கு ஐ நா. நிகழ்ச்சித்திட்ட மனிதாபிமான செயற்திட்டங்களுக்கான ஆலோசகர் மல்கம் ரீடவுட்டும் ஐ. நா. தொண்டர் சேவை அதிகாரியான பங்களாதேஷை சேர்ந்த ரப்பான் குமார் பர்மனும் கடந்த வாரம் யாழ். வந்திருந்தனர். (தி, பா)

### மேற்பார்வையாளர்

தில் தவறாது சந்திக்குமாறு வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இக் கூட்டத்தில் இப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

### கிராமசேவை

பொதுவான ஒழுக்க நெறிக்கோவை தேவைப்படுவதால் அச் சேவையை மறுசீரமைப்பதற்காக இந் நடவடிக்கை தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது-

### பலாலி

அவர் வெளியிட்டார். அவர் தொடர்ந்து பத்திரிகையாளர் கேள்விகளுக்கு பதில் அளிக்கையில், தற்போது பலாலி இராணுவ முகாம் மீதான அச்சுறுத்தல் தொடர்ந்து இருந்த போதும் மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எந்த நிலைமையையும் எதிர்கொள்ள இராணுவத்தினர் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தேர்தல் தொடர்ந்து நடத்தக்கூடிய சாத்தியக் கூறுஉண்டா? என பத்திரிகையாளர் வினாவிய போது, அங்கு தேர்தல் நடத்தக்கூடிய உகந்த நிலை இருப்பதாகவும் எனவே ஆகஸ்ட் 16-ம் திகதி தேர்தல் நடைபெறும் என திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை செய்தியாளர், யாழ், மாவட்ட தேர்தல் நடவடிக்கைகளை தாம் நேரில் சென்றுபார்க்க விருப்பம் தெரிவித்ததாகவும் இதற்கு அனுமதிதருமாறு வேண்டுகோள் விடுத்ததாகவும் தெரியவருகி

லளிக்கையில் இது தொடர்பாக தற்போது முடிவு கூற முடியாது என்றும் பாதுகாப்புக்கருதி அவர்களை அழைத்து செல்வதை தான் விரும்பவில்லை என தெரிவித்தார்.

இதேவேளை இப்பத்திரிகையாளர் மகாநாட்டிற்கு தலைமை வகித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தனது கருத்தை தெரிவிக்கையில் விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாண சிங்கள வாக்காளருக்குக் கூட பொதுத் தேர்தலின் வாக்களிப்பில் கலந்து கொள்ளக் கூடாது என கடிதம் எழுதியிருப்பதாக தெரிவித்தார்.

தபால், தந்தி தொலை தொடர்புகள் அமைச்சர் எம். எஸ். அதிகாரி நீதிமன்றத்தில் பிணையில் விடுதலை செய்யப்பட்டது தொடர்பாக பத்திரிகையாளர் கேள்வி கேட்டபோது,இது தற்போது நீதிமன்றின் முன் உள்ள பிரச்சினை என்றும் இதில் தலையிடுவதை ஐக்கிய தேசிய கட்சியோ அன்றி அரசாங்கமோ விரும்பவில்லை எனவும் கூறினார்.

## மரண அறிவித்தல்
## நாகலிங்கம் தர்மராசா
(நெல்லியடி டைமன் வெல்டேஸ் உரிமையாளர்)

நாகலிங்கம் தர்மராசா 03 - 08 - 1994 காலை இறைபதமெய்தினார். அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதர் நாகலிங்கம், நாகலிங்கம் சின்னம்மாவின் மூத்த மகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருஸ்ணகுமார் விஜிதா (கனடா), மணிவண்ணன் (கனடா), கமலக்கண்ணன் (பொறியியலாளர், கொழும்பு), சோபியா, அருள் ஆகியோரின் தந்தையாரும், ராசேந்திரம், தெய்வேந்திரம் (இந்திரா கபே), புவனேந்திரம், மகேந்திரன் (உடுப்பிட்டி மெதடிஸ் மிசன் பெண்கள் பாடசாலை) ஆகியோரின் சகோதரரும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
தெய்வேந்திரம்
(சகோதரன்)

இந்திரா கபே,
நெல்லியடி,
கரவெட்டி.

(9014)